499

Regd. M. No. 2797 விலை அணு ஒன்று

வர்த்தக ஊழியன்.

VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | August 1937

மலர் 6.] திருச்சிராப்பள்ளி ஆகஸ்டு-மீ 1937. [இதழ் 62

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா

உள்நாட்டிற்கு ரூ. 1. கி. ரூ. 3 வெளி நாட்டிற்கு ரூ. 1½

மாதம் ஒன்றுக்கு விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 1—0—0.

பக்கம் ஒன்றுக்கு ரூ. 15—0—0.

அரை பக்கத்திற்கு ரூ. 10. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25

முன்பணமில்லாத விளம்பரங்கள்

பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

கனம் கிரி அவர்களின் உபதேசம்	....	19
தென்னிந்தியா ரயில்வே கவனிக்குமா	....	20
சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள்	....	21
சேலம் சுதேசி பொருட் காட்சி	....	23
Travancore State Industries	....	25
S. .I. Ry. Advisory Committee	....	26
Cochin Trade	....	27
Trade Recipes	....	28
Reviews	....	29

14 OCT 1937

"VARTHAGA OOLIAN"

Annual Subscription.

Inland Rough Re. 1. Glaze Rs. 3. Foreign Sh. 4.

Advertisement Tariff Per Insertion.

One inch Re. 1—0—0. One Page Rs. 15—0—0

Half Page Rs. 10—0—0. Wrapper Page Rs. 25.

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

RECEIPT OF A COPY OF

VARTHAGA OOLIAN'

IS AN INVITATION TO SUBSCRIBE OR TO ADVERTISE.

All Correspondence, Money Orders, etc., must be addressed to:—

THE MANAGER,

"VARTHAGA OOLIAN",

TRICHINOPOLY, SOUTH INDIA.

'Varthaga Oolian'

(Monthly Journal of Commerce Trade and Industry)

Independant Journal with trenchant views.

Gives hundreds of practical ideas of money making.

The best journal in South India for the earnest purpose full and ambitious businessmen.

Pages for **REVIEWS** are allotted.

Every one engaged in business should read

VARTHAGA OOLIAN

Best medium for Businessmen to advertise.

Annual subscription Re. One only.

Apply to:

The Manager,
"VARTHAGA OOLIAN"
TRICHINOPOLY,
South India.

வர்த்தக நண்பர்களே!

உங்கள் வர்த்தகம் விருத்தி யடைந்து நீங்கள் லாப மடைய விரும்பினுல்,

'வர்த்தக :: :: ஊழியனில்'

விளம்பரம் செய்யுங்கள்.

மானேஜர்,
வர்த்தக ஊழியன், திருச்சி.

கண்ணைக்கவரும் ஜெர்மன் புதிய படங்கள்

ஜெர்மனியிலிருந்து நேராக வரவழைக்கப்பட்டவை

விலைகள் மிக சரசம்!

நேரில் வந்து பாருங்கள்!

எம்மிடம் ரவிவர்மா படங்களும், சட்டம் கண்ணுடிகள், வகையருக்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

T. R. ரெங்கசாமி நாயுடு,
வர்ணம், கண்ணுடி வியாபாரம்,
பெரியகடைவீதி, திருச்சினுப்பள்ளி.

" நாணயம் நணி பேண் "

"வர்த்தக ஊழியன்"

திருச்சினாப்பள்ளி.
1937-ஹு ஆகஸ்ட்-மீ

Hon Mr. Giri's Advice.

கனம் கிரி அவர்களின் உபதேசம்.

இம்மாதம் முதல் தேதி சேலத்தில் நடந்த சுதேசிப் பொருட் காட்சியை திறந்து வைத்த சென்னை அரசாங்கத்தின் தொழில் மந்திரி கனம். வி வி. கிரி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவை பிரிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். கனம் கிரி அவர்கள் நாட்டின் நிலைமைக்கு தக்கவாறு சொல்லியிருப்பதை நாம் பாராட்டுகிறோம். தற்காலம். வாய்பேச்சளவில் தலைவர்களாயுள்ளவர்களில் பலர், பொருளாதார முன்னேற்றத்தைக் குறித்தும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான வழிகளைப்பற்றியும் மேடைகளில் உபயோகமற்ற பிரசங்கங்களை கூறிவருவதை பொது ஜனங்கள் கேட்டு சலிப்படைந்து விட்டார்களென்பதில் ஐயமில்லை. செய்து முடிக்க முடியாத பல திட்டங்களை பொது ஜனங்களிடம் விரிவாக எடுத்து சொல்லி அவர்களை தங்கள் வசம் திருப்பி முடிவில் ஜனங்களை ஏமாற்றுவதை கனம். கிரி அவர்கள் கண்டிக்கும் மாதிரியில்

" வெறும் மேடைப் பிரசங்கங்களும், விவாதங்களும் இப்பிரச்சினையை தீர்த்துவைக்காதென்றே நான், தெளிவாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்."

என்று சொல்லியுள்ளார் மேலும், இந்தியா விவசாய நாடானாலும் பொது ஜனங்கள் விவசாயத்தை மட்டும் நம்பியிருந்தால் போதாது என்றும் விவசாயத்தின் வருமானம் மிக குறைந்து வரும் இக்காலத்தில், வேறு பல துணைத் தொழில்களையும் அனுசரிக்க வேண்டியது அவசியமென்றும் சொல்லியிருப்பதுடன் ராட்டினத்தினால், இந்தியா முன்னேற்றமடையும் என்று கூறுவோருக்கு அவ்வாறு நினைப்பது முற்றிலும் தவறு என்பதற்கு,

" பெரிய கைத்தொழில்களை ஏற்படுத்துவதில் நம்பிக்கை இல்லையென்று சொல்லுபவர்களில் நான் ஒருவனல்ல."

என்று சொல்லியிருக்கிறார். இதனால் தேசத்தின் குடிசைத் தொழில், கெட்டுப்போகும், என்பது அவரது கருத்தல்ல நவீன இயந்திர வசதிகளைக் கொண்டு அயல் நாட்டினர் இந்தியாவின் தேவையான பொருள்களை கப்பல் கப்பலாக கொண்டு வந்து நம் நாட்டில் குவித்துக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் நாம் பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது அவசியமாகும் என்பது கனம் மந்திரியின் முக்கிய நோக்கமாகும் என்று நினைக்கிறோம். வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதற்கும் அவர் கொண்டுள்ள அபிப்பிராயமும் ஒத்துக் கொள்ள வேண்டியதே ஆனால் இந்த முயற்சியில் பொது ஜனங்களுக்கு அரசாங்கத்தாரே, முதலாவதாக வழிகாட்ட வேண்டும். கனம். மந்திரி அவர்கள் அபிப்பிராயப்படுகிறபடி ஏழை விவசாயிகளை "நான் சொல்லுகிறேன், நீங்கள் செய்யுங்கள்" என்ற மாதிரியில் சொல்லிவிட்டால் போதாது என்று கனம். மந்திரி அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம். கிராம வாசிகளின் விருப்பத்திற்கிணங்க ஆங்காங்குள்ள தரிசு நிலங்களை விவசாயம் செய்து கொள்ளவும், மேய்ச்சல் நிலங்களாகவும் உபயோகித்துக்கொள்ள அனுமதியளித்து, அதன் மூலம் பல பண்ணைகளை ஏற்படுத்தி கொடுத்தால் வேலையில்லா திண்டாட்டம் ஒருவாறு நிவர்த்தியடையக்கூடும். முடிவாக கனம் மந்திரி அவர்கள்.

" நம்முடைய தேசத்தின் புனருத்தாரணத்திற்கு சிறிய கைத்தொழில்கள் குடிசைத் தொழில்கள் முதலியவற்றை ஏற்படுத்துவதில் ஜப்பான் முதலிய தேசங்களைப் பின்பற்ற வேண்டுமென்று கைத்தொழில்காரர்கள் நிபுணர்கள் எல்லோரையும் கைத்தொழில் மந்திரி என்ற முறையில் கேட்டுக்கொள்ளுகிறேன்."

என்று முடிக்கிறார். நமது பத்திரிகையின் நோக்கமும் கனம் மந்திரியின் போக்கும் ஒத்திருப்பதைப்பற்றி நாம் மகிழ்ச்சியடைகின்றோமாயினும் சிறு தொழிலுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கும் விஷயத்தில் இதர நாடுகள் அளிக்கும் உதவிகளை நமது அரசாங்கத்தாரும் செய்து கொடுக்காமல் இருந்தால் தேசத்தின் குடிசைத் தொழில் எவ்வாறு விருத்தியாகும் என்று கனம். மந்திரி அவர்களை கேழ்க்கிறோம்.

ஜப்பான் போன்ற நாடுகளில் குடிசைத் தொழிலுக்கு தக்க பாதுகாப்பு அளிப்பதினால் தான் அந்த நாடுகளில் குடிசைத் தொழில்கள் மென்மேலும் விருத்தியடைகின்றன ஆனால் துரதிர்ஷ்டம் வாய்ந்த நமது நாட்டில் அரசாங்க உதவி குடிசைத் தொழில்களுக்கு போதியதாக இல்லாததால் சிறு தொழில்களும் மறைந்து விடும் நிலைமையிலிருக்கின்றன. ஆகவே, குடிசைத் தொழில் அபிவிருத்தியை எதிர்பார்க்கும் கனம். மந்திரி அவர்கள் அத்தொழிலின் வளர்ச்சிக்கு முக்கிய ஆதாரமாயுள்ள பாதுகாப்பு அளிக்க, அரசாங்கத்தின் கைத்தொழில் மந்திரி என்ற முறையில் கட்டுப்பட்டிருக்கிறார். கைத்தொழிலும், வர்த்தகமும் எந்த நாட்டில் அபிவிருத்தி அடைகின்றதோ அந்த நாடு தான் பொருளாதாரத்தின் முன்னணியில் நிற்கும் என்பதை நாம் ஞாபகமூட்டுகிறோம்.

ஆகஸ்டு மாத பலன்.

வியாபாரப்பகுதி.

வாழை, புல்வகை கிழங்கு, இலை, பட்டை, ஆகார தானியங்கள், சீனி, சர்க்கரை, தோல், கருப்புக்கட்டி, உப்பு, வஸ்திரம், ஆயுதம், எள், வேர், முத்து வைரம், எண்ணெய்வகை, நீர்வாழ்வன, சில்லரைச் சாமான்கள் இவை விலையேறும். பருத்தி, கொடிவகை, கொள்ளு, சணல், கோதுமை, உழுந்து, கடுகு, கரும்பு, தங்கம், காரீயம், முட்செடிகள், விருக்ஷங்கள், பழவகை இவை விருத்தியாகி மலியும்.

தென்னிந்தியா ரயில்வே கவனிக்குமா?

S. I. Ry. to Note.

தென்னிந்திய ரயில்வேயில் கட்டணங்கள் அதிகமாயிருக்கிறதென்றும் அதனால் மோட்டார் பஸ் மூலமாய் பிரயாணமும் லாரிகள் மூலமாய் சாமான்களும் மிக குறைவான கட்டணத்தில் போக்குவரத்து நடைபெறுகிறகின்றன, என்றும் நமது பத்திரிகையில் இதற்குமுன் பல தடவைகளிலும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அவை எல்லாம் தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாருக்கு செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது. மோட்டார் பஸ்களும் லாரிகளும் தென்னிந்திய ரெயில்வேயின் வருமானத்தை பிடுங்கிக்கொண்ட இப்போது ரெயில் வருமானத்தை அதிகரிக்கச்செய்ய வழியை ரெயில்வே அதிகாரிகள் யோசனை செய்து கொண்டிருப்பதாக அறிகிறோம். இவர்கள் யோசனைசெய்து முடிப்பதற்குள் தென்னிந்திய ஏற்றுமதி, இறக்குமதி, மோட்டார்களுக்கே, சொந்தமாய் விடுமென்று நாம் ரெயில்வே கம்பெனியாருக்கு தெரிவிக்க விரும்புகிறோம். வர்த்தகர்களுக்கு, லாரி மூலமாய் சாமான்கள் வருவதினால் உண்டாகும் லாபங்களை சிறிது எடுத்துக் காட்டுகிறோம். உதாரணமாகசென்னையிலிருந்து திருச்சிக்கு 2 அந்தர்கொண்ட சர்க்கரை மூட்டை ஒன்று ரெயில்வே மூலமாய் அனுப்பினால் ரெயில் சார்ஜ் வகையறாவுக்கு ரூ 2 ஏற்படுமானால் லாரி மூலமாய் வரும் அதே மூட்டை பதினான்கு அணாவில் கடைக்குவந்து சேருகிறதென்றால் ரெயில் மார்க்கமாய் எந்த வர்த்தகராவது வரவழைப்பாரா? என்பது கவனிக்கக்கூடிய விஷயமாகும். நாம் மேலே குறிப்பிட்டது ஒரு உதாரணமே தவிர லாரிகள் மூலமாய் பிரதி தினமும், சென்னையிலிருந்து திருச்சிக்கு வரும் சாமான்கள் ஏராளமாகும். சென்னைக்கும் அதுபோலவே திருச்சியிலிருந்து வாழைக்காய் தோல் முதலிய சாமான்கள் பிரதிதினமும் செல்லுகின்றன, இதனால் ரெயில் மூலமாய் சாமான்களை வரவழைப்பதைவிட லாரிகள் மூலமாய் வருவதினால் வர்த்தகர்களுக்கு லாபம் கிடைப்பதுடன் காலதாமதமின்றி உடனுக்குடன் ஆர்டருக்கு சப்ளை செய்யக்கூடியதாகவுமிருக்கிறது. இனி பிரயாண வசதியில் ஜனங்கள் மோட்டார் பஸ்களை விரும்புவதும் கட்டணக்குறைவே காரணமாகும். திருச்சியிலிருந்து மதுரைக்கு மோட்டார் பஸ் கட்டணம் ஒரு ரூபாயாக இருக்கிறது ஆனால் ரெயில் கட்டணம் சுமார் இரண்டு ரூபாயானால் பொது ஜனங்கள் ரெயில்வேயில் எப்படி பிரயாணம் செய்வார்கள். இம்மாத முதல் தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாரும் சிலவிடங்களுக்கு சட்டணங்கள் குறைத்திருப்பதாக அறிகிறோம். அந்த ஏற்பாடுகளில் நேராக பிரயாணம் செய்வோர் அதிக கட்டணம் செலுத்தும்படியாக இருக்கிறது, அவ்விதம் செய்வதால் நேராக செல்லும் பிரயாணிகள் மோட்டார் பஸ்களைத்தானே விரும்புவார்கள் திருச்சி ஜங்ஷனிலிருந்து திண்டுக்கல் ஜங்ஷனுக்கு ஒன்பதரை அணாவும், திண்டுக்கல் ஜங்ஷனிலிருந்து மதுரை ஜங்ஷனுக்கு ஆறரை அணாவும் கட்டணம் ரெயில்வே கம்பெனியால் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குறைவான கட்டணம் திருச்சி ஜங்ஷனிலிருந்து திண்டுக்கல் ஜங்ஷனில் இறங்கி அங்கிருந்து மறுடிக்கெட் வாங்கினால் தான் கிடைக்கும். ஆனால் நேராக செல்ல வேண்டுமானால் நாம் மேலே கூறியபடி சுமார் இரண்டு ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும். இத்தகைய ஏற்பாடு ரெயில்வே கம்பெனியாருக்கும் பொது ஜனங்களுக்கும் பலன் கொடுக்கக்கூடிய விஷயமல்ல என்பதே நமது அபிப்பிராயமாகும்.

சமீபத்தில் நமக்கு கிடைத்த செய்தியிலிருந்து சென்னைக்கும் திருச்சிக்குமிடையே, நல்ல முறையில் பிரயாணம் செய்யக்கூடிய பஸ், வசதி மிக குறைவான கட்டணத்தில் ஏற்படப்போவதாக அறிகிறோம். அம்மாதிரி மோட்டார் பஸ் வசதி மிக குறைவான கட்டணத்தில் சென்னைக்கும் திருச்சிக்குமிடையே ஏற்படுமானால் தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாரின் வருமானம் இன்னும் பாதிக்கும் என்று நினைக்கின்றோம். ஆகவே, வெள்ளம் வந்தபின் அணை போட முயற்சிப்பதைவிட வெள்ளம் வருமுன் அணை போட ஏற்பாடுசெய்வதே சிறந்த முறையாகும் என்பதை போல தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் காலப்போக்கை அனுசரித்து சென்னைக்கும், திருச்சிக்குமிடையே இப்பொழுது நடைமுறையில் இருக்கும் கட்டணங்களை திருத்தியமைக்க ஏற்பாடு செய்வார்களாகில் பொது ஜனங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நம்புகிறோம்.

நாம் இவ்வளவும் ரெயில்வே கம்பெனியின் நலத்துக்காக கூறினாலும் பொது ஜனங்கள், மோட்டார் மூலமாய் பிரயாணம் செய்வதினால் உண்டாகும், பல எதிர்பாராத விபத்துகள் ரெயில்வேயினால் ஏற்படாது என்ற நோக்கம்தான் என்பதையும் வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பத்திரிகைகள் வரவு.

அறிவுக்கொடி	சோதிட பரிபாலனி
இந்தியகேசரி	தனவணிகன்
கல்வி	தேசாபிமானி
சுதாநிதி	தேசபந்து
கிராம ஊழியன்	நல்வழி
குமரன்	நவமணி
குடி அரசு	மிராசுதார்
கூட்டுறவு	விடுதலை
சினிமா உலகம்	விநோதன்
சினிமா டாக்கீஸ்	விஸ்வகலாநிதி
சுதந்திர வீரன்	ஜகன்மோகினி
சுதேச நாட்டியம்	திருச்சி வர்த்தமானி
செட்டிநாடு	
செங்குந்த மித்திரன்	

வர்த்தக ஊழியனை வாங்கி வாசியுங்கள்.

சாமான்களுக்கு ரயில்வேசார்ஜுகள் (RAILWAY RATES.)

The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advice & Foreign Rate Circu'ars issued by the S. I Ry,

சாமான்கள்.	எங்கிருந்து.	எந்த இடத்துக்கு.	ரேட்டு மணங்குக்கு அ.	பை.	எந்த தேதியி லிருந்து	ஷரா.
முட்டை	கொட்டாரகாரா	எழும்பூர்	35	0	15— 7—37	
சர்க்கரை	நெல்லிக்குப்பம்	திருச்சி கூடேஸ்	3	9	1— 7—37	
சக்கை	ஊத்துக்குளி	மதுரை	2	3	15— 7—37	முதல் 30—9—37 வரை.
,,	,,	நல்விகுப்பம்	3	7	,,	,,
,,	,,	தூத்துக்குடி	3	6	,,	,,
பருத்திவிதை	திண்டுக்கல்	கோயம்புத்தூர்	2	0	25— 6—37	
சடலெண்ணை	பொள்ளாச்சி	பீச்சு	8	9	21— 6—37	
நெருப்புபெட்டி	சிவகாசி	மங்களூர்	30	0	1— 7—37	
இரும்பு	தூத்துக்குடி	பீச்சு	5	9	23— 6—37	
தானியங்கள்	கூடலூர்	போளூர்	2	6	25— 6—37	
அரிசி	சிதம்பரம்	புதுச்சேரி	2	3	,,	
,,	பரங்கிப்பேட்டை	,,	2	0	,,	
முந்திரி பருப்பு	வள்ளிகுன்னு	கள்ளிக்கோட்டை	0	8	,,	
அடுப்புகரி	பலகனூத்து	மதுரை	2	0	,,	
தேங்காய்	பரப்பணங்காடி	கள்ளிக்கோட்டை	0	8	,,	
,,	வள்ளிகுன்னு	,,	0	8	,,	
விறகு	கெட்டி	அரவங்காடு	0	10	15— 6—37	முதல் 28—2—38 வரை.
,,	லவ்டேல்	,,	0	10	,,	,,
,,	உதகமண்டலம்	,,	0	10	,,	,,
,,	வல்லபூழா	கோயம்புத்தூர்	2	4	1— 7—37	முதல் 30—6—38 வரை.
,,	,,	போத்தனூர்	2	4	,,	,,
,,	,,	சிங்காநல்லூர்	2	4	,,	,,
,,	,,	துடியலூர்	2	4	,,	,,
,,	அங்காடிபுரம்	,,	2	4	,,	,,
,,	மேலட்டூர்	,,	2	4	,,	,,
,,	சிலாம்பூர் ரோடு	,,	2	4	,,	,,
,,	வாணியம்பலம்	,,	2	4	,,	,,
,,	அங்காடிபுரம்	சிங்காநல்லூர்	2	4	,,	,,
,,	மேலட்டூர்	,,	2	4	,,	,,
,,	சிலாம்பூர் ரோடு	,,	2	4	,,	,,
,,	வாணிஅம்பலம்	,,	2	4	,,	,,
,,	அங்காடிபுரம்	போதனூர்	2	4	,,	,,
,,	மேலட்டூர்	,,	2	4	,,	,,
,,	சிலாம்பூர் ரோடு	,,	2	4	,,	,,
,,	வாணிஅம்பலம்	,,	2	4	,,	,,
,,	,,	கோயம்புத்தூர்	2	4	,,	,,
,,	சிலாம்பூர் ரோடு	,,	2	4	,,	,,
,,	மேலட்டூர்	,,	2	4	,,	,,
,,	அங்காடிபுரம்	,,	2	4	,,	,,
,,	,,	துடியலூர்	2	10	1— 7—37	
,,	மேலட்டூர்	,,	2	10	,,	
,,	சிலாம்பூர் ரோடு	,,	2	10	,,	
,,	வாணிஅம்பலம்	,,	2	10	,,	
,,	வல்லபூழா	,,	2	10	,,	
ஓடுகள்	எடக்குளம்	எல்லூர்	6	10	,,	
,,	,,	நிடபுரோலு	6	10	,,	
,,	,,	ஓங்கோல்	6	10	,,	
,,	,,	பாலகோல்	6	10	,,	
,,	,,	பித்தாபுரம்	6	10	,,	
,,	,,	ராஜமேந்திரி	6	10	,,	
,,	,,	ரெபள்ளி	6	10	,,	

தென் இந்தியா ரெயில்வே கம்பெனி லிமிடெட். (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

திருச்சி பாலக்கரை கரூர் செக்ஷனில் மலிவான 3-வது வகுப்பு ஒற்றை பிரயாண டிக்கெட்டுகள்.

1937-ம் வருஷம் ஆகஸ்டு-மீ 1உ முதல் கீழ்கண்ட ஸ்டேஷன்களுக்கிடையே மிகக்குறைந்த கட்டணத்துக்கு எல்லாவண்டிகளிலும் செல்லுபடியுள்ள 3-வது வகுப்பு ஒற்றை பிரயாண டிக்கெட்டுகள் கொடுக்கப்படுகின்றன.

இந்த டிக்கெட்டுகள் இந்த ரெயில்வேயின் டைம்டேபிள் அண்டு கைட் நெ. 37 பக்கம் 302-ல் கண்ட விதிகளுக்கு உட்பட்டு கொடுக்கப்படுகின்றன. மற்ற விபரங்களுக்கு ஸ்டேஷன் மாஸ்டர்களை கேழ்க்கவும்.

ஸ்டேஷனுக்கு அல்லது ஸ்டேஷனிலிருந்து (3-வது வகுப்பு ஒற்றை பிரயாண கட்டணம்.)

ஸ்டேஷன்களிலிருந்து	திருச்சி கோட்டை	கம்பரசம் பேட்டை	முத்தரச நல்லூர்	மேக்குடி	ஜீயபுரம்	எலமனூர்	பெருகமணி	பட்டவாத்தலை	மருதூர்	குளித்தலை	திம்மாச்சிபுரம்	லாலா பேட்டை	மஹாதானபுரம்	சித்தலவாய்	மாயனூர்	மணவாசி	புலியூர்	சணப்பிரட்டி	கரூர்
	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.	அ. பை.
திருச்சி பாலக்கரை	0 6	1 0	1 9	2 0	2 0	2 6	3 0	3 6	4 0	4 0	5 0	5 6	5 6	5 9	6 0	6 6	7 0	7 6	7 6
திருச்சி கோட்டை		0 9	1 0	1 6	1 6	2 0	2 6	3 0	3 6	3 6	4 6	5 0	5 0	5 6	5 6	6 0	6 6	7 0	7 0
கம்பரசம் பேட்டை			0 6	1 0	1 3	1 6	2 0	2 6	3 0	3 6	4 0	4 6	4 6	5 0	5 3	5 6	6 0	6 6	7 0
முத்தரச நல்லூர்				0 6	0 9	1 6	1 9	2 3	3 0	3 3	4 0	4 6	4 6	5 0	5 3	5 6	6 0	6 6	7 0
மேக்குடி					0 6	1 0	1 6	2 0	2 6	2 9	3 6	3 9	4 3	4 6	4 6	5 3	5 6	6 0	6 6
ஜீயபுரம்						0 9	1 3	1 9	2 6	2 9	3 0	3 6	3 9	4 0	4 6	5 0	5 6	6 0	6 0
எலமனூர்							0 6	1 6	2 0	2 3	3 0	3 3	3 6	3 6	4 0	4 6	5 0	5 6	6 0
பெருகமணி								1 0	1 6	2 0	2 6	3 0	3 3	3 6	3 9	4 0	4 6	5 0	5 0
பட்டவாத்தலை									0 9	1 6	2 0	2 6	2 9	3 0	3 6	3 6	4 0	4 6	5 0
மருதூர்										0 9	1 6	2 0	2 3	2 6	3 0	3 3	3 6	4 0	4 0
குளித்தலை											1 0	1 3	1 9	2 3	2 3	2 9	3 3	3 6	4 0
திம்மாச்சிபுரம்												0 9	1 3	1 6	1 9	2 3	2 6	3 0	3 6
லாலா பேட்டை													0 9	1 3	1 9	2 0	2 3	2 6	3 0
மஹாதானபுரம்														0 6	1 3	1 6	2 0	2 6	2 6
சித்தலவாய்															0 9	1 6	1 9	2 3	2 3
மாயனூர்																0 9	1 6	1 9	2 0
மணவாசி																	0 9	1 6	1 9
புலியூர்																		1 0	1 3
சணப்பிரட்டி																			0 9

சேலம் சுதேசி பொருட்காட்சி.

(Salem Swadeshi Exhibition)

இம்மாதம் முதல் தேதி சேலத்தில் நடந்த அகில இந்திய கதர், சுதேசிப் பொருட் காட்சியை, தொழில் மந்திரி கனம் வி. வி. கிரி திறந்து வைக்கையில் பேசியதாவது:—

இப்பொருட்காட்சியைத் திறந்து வைக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டதற்கு நான் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். ஒரு காலத்தில் எங்கும் காங்கிரஸ் மயமாகவிருந்ததால் கவர்ன்மெண்டார் பொருட்காட்சியில் யாதொரு சம்பந்தத்தையும் வைத்துக்கொள்ள பயந்தார்கள். இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் எல்லா வகையருக்களுக்குட்பட்டு இன்று காங்கிரஸ் உத்தியோக மேற்றுக்கொண்டுவிட்டது. மேற்படி சட்டம் சுதந்திரம் அல்லது சுயராஜ்ஜியத்தின் உண்மைப் பொருளை நமக்கு அளிக்கவில்லை. இந்த நிலைமையில் நமக்குள்ள எல்லா மூலாதாரமான ஆதரவையும் நாம் பயன்படுத்திக்கொண்டு தேசத்தின் முன்னேற்றத்திற்கு நம்மாலானதைச்செய்யவேண்டும். இந்தியாவின் ஏழு கோடி குடும்பங்களில் சாப்பாட்டுப் பிரச்னை தான் இப்பொழுது நம்மிடையுள்ள ஒரு பெரிய பிரச்னையாகும். ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பாடு, வசிப்பதற்கு ஒரு நல்ல வீடு, உடுப்பதற்கு போதிய வஸ்திரம், கிழத்தனம், வியாதி, வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவற்றிற்குப் பாதுகாப்பு முதலியன ஒவ்வொரு நகர வாசிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் கிடைத்தாலொழிய உலகத்தின் தேசங்களில் இந்தியாவுக்கு ஸ்தானம் கிடையாது. 'வாழ்வதற்கு உரிமை; 'வேலை செய்வதற்கு உரிமை' என்ற உரிமைகளே முக்கிய உரிமைகளென நான் பல தடவை சொல்லிவந்திருக்கிறேன். நாகரீக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு சர்க்காரும் மேற்படி உரிமைகள் தனது பிரஜைகளுக்குக் கிடைக்கும்படியாக உத்தரவாத மளிக்கவேண்டும். சர்வதேச சங்கம் சேகரித்திருக்கும் புள்ளி விவரக் கணக்குப்படி இதர தேசங்களில் 400 லக்ஷம் ஜனங்கள் வேலையில்லாமலிருக்கிறார்கள். அதைக்காட்டிலும் அதிகப்படியான பேர் இந்தியாவில் முழுமையும் வேலையில்லாமலே இருக்கின்றனர். கிட்டத்தட்ட 3 கோடிப் பேர் அரைச் சாப்பாட்டிலேயே ஜீவித்து வருகின்றனர். ஆகவே, பூரா தேசத்தின் அரசியல், பொருளாதார விடுதலையை ஆதாரமாகக்கொண்ட சுயராஜ்யத்திற்காகவே பூரா தேசமும் பாடுபடவேண்டும். அது தான் பாமர மக்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தும்.

பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி.

ஆகையால் வெறும் மேடைப் பிரசங்கங்களும், விவாதங்களும், தர்க்கங்களும், இப் பிரச்னையைத் தீர்த்து வைக்காவென்றே நான் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பூரா தேசத்தையும், அதாவது இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களையும் நாம் விஞ்ஞான சாஸ்திர முறைப்படி ஒழுங்குபடுத்தவேண்டும். கடைசி ஜனத்தொகைக் கணக்குப்படி நம் தேசத்தின் ஜனத்தொகை 3500 லட்சம் என்று கணக்கிடப்படுகிறது. அவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் கிராமங்களில் வசிக்கிறார்களென்றும் நூற்றுக்கு 73 பேர் தங்கள் ஜீவனத்திற்கு விவசாயத்தையே நம்பியிருக்கிறார்களென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நகரங்களில் வசிக்கும் நூற்றுக்கு 10 பேர்கூட நகர வாழ்க்கையில் மிகச் செலவுள்ள அம்சங்களுக்குக் கிராமங்களிலிருந்து தங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தையே நம்பியிருக்கிறார்கள். தங்களுடைய ஜீவனத்திற்கு ஜனங்கள் விவசாயம் ஒன்றைமட்டுமே நம்பியிருக்க முடியாதென்று இப்பொழுது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதிகச் செலவாகாத துணைக் கைத்தொழில்களை நீங்கள் முதன்முதலாக ஏற்படுத்தினாலொழிய கிராமங்களிலுள்ள ஜனங்கள் பட்டினி கிடக்கவேண்டியதுதான்.

பெரிய கைத்தொழில்களை ஏற்படுத்துவதில் நம்பிக்கையில்லையென்று சொல்பவர்களில் நான் ஒருவனல்ல.

ஆனால், பெரிய கைத்தொழில்கள் ஒன்றுமில்லாததால் நம் தேசத்தின் கைத்தொழில் புனருத்தாரணத்திற்கு ஒன்றும் தெரியாமல் நாம் சும்மாயிருக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆகவே நகரத்தின் நிலைமையையோ விஷயங்களையோ பற்றி நினைக்காமல் கிராம விஷயங்களைப்பற்றி ஜனங்கள் நினைப்பார்களானால் இந்தியாவிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டப் பேயை விரட்டிவிடலாமென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

குடிசைக் கைத்தொழில் போன்ற சிறிய கைத்தொழில்களை ஏற்படுத்துவதற்கு நாம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவில் சாகுபடியின்றித் தரிசாகக் கிடைக்கும் நிலங்கள் ஏராளமாகவிருக்கின்றன. இந்நிலங்களைச் சாகுபடி செய்தால் எத்தனையோ லக்ஷக்கணக்கான ஏழைமக்களுக்குச் சாப்பாடு கிடைக்குமென்பதுமல்லாமல் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையும் பெருத்த அளவு தீரும்.

இந்நிலங்களைச் சாகுபடி செய்வது மட்டும் போதாது. இப்பிராந்தியங்களில் நடுத்தர வகுப்பு கைத்தொழில்களும், குடிசைத் தொழில்களும் ஏற்படுத்தப்பட்டால், சாகுபடி இல்லாத காலத்தில் அங்கு வசிக்கும் கிராமவாசிகளுக்கு ஒரு சகாயத் தொழில் ஏற்படுத்திக் கொடுத்ததாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம்.

ஆக்ராவில் தயால் பாக் என்று பெயர் போன காலனியை உங்களில் சிலர் பார்த்திருப்பீர்கள், பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தக் காலனியின் சமூக, பொருளாதார கைத்தொழில் நடவடிக்கைகள் தேசத்தின் நிர்மாண வேலை மனோபாவமுள்ள எல்லோர் மனதையும் கவர்ந்திருக்கின்றன. இப்பொழுது தயால் பாக்கில் 3000 ஏக்கராக்கள் வரை இருக்கின்றன. 708 மாணவர்கள் உள்பட ஏராளமானவர் அங்கிருக்கிறார்கள். அந்தக் காலனியில் சகல விதமான சவுகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இம்மாதிரியான பண்ணைகளை முதல் நடவடிக்கையாக ஒரு டஜன் ஜில்லாக்களில் ஏற்படுத்துவது சிறந்த வழியாகும்.

நம்முடைய தேசத்தின் புனருத்தாரணத்திற்குச் சிறிய கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள் முதலியவற்றை ஏற்படுத்துவதில் ஜப்பான் முதலிய தேசங்களைப் பின்பற்ற வேண்டுமென்று கைத்தொழில்காரர்கள், பொருளாதார நிபுணர்கள் எல்லோரையும் கைத்தொழில் மந்திரி என்ற முறையில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சுருங்கச் சொன்னால் வீணாகக் கிடக்கும் சாகுபடிக்குரிய நிலங்களைச் சாகுபடி செய்வது குடிசைத் தொழில் முதலிய சிறிய, பெரிய கைத்தொழில்களை ஏற்படுத்துவது முதலியன நம் தேசத்தின் பொருளாதாரப் பிரச்னையை வெகுவாகத் தீர்க்குமென்பதில் ஆட்சேபமில்லை.

THE MOST DEPENDABLE INVESTMENT

WHICH ENSURES A LIFE OF

EASE AND COMFORT

TO YOURSELF IN YOUR OLD AGE

OR TO YOUR WIFE AND CHILDREN

When you, their Breadwinner, are no longer there to provide for their Daily necessities

is

LIFE ASSURANCE

Invest now in an "ORIENTAL" Policy

and ensure

Your and your Dependents' future

Write for particulars to:-

THE

ORIENTAL

Government Security Life Assurance Co., Ltd.,

3. Mc Donalds Road, Trichinopoly.

Or to any of the Company's under mentioned offices.

Agra
Ajmer
Ahmedabad
Allahabad
Anbala
Amritsar
Bangalore
Bareillp
Bellary
Calcutta
Calicut
Coimbatore
Colombo
Dacca
Delhi
Gauhati
Guntur
Jalgaon
Jalpaiguri
Jodhpur
Jubbulpore
Karachi
Kuala Lumpur
Lahore
Lucknow
Madras
Mandalay
Madura
Mercara
Mombasa
Multan
Mysore
Nagpur
Patna
Peshawar
Poona
Raipur
Rajshahi
Ranchi
Rangoon
Rawalpindi
Singapore
Sukkur
Trivandrum
Vellore
Vizagapatam

TRAVANCORE STATE INDUSTRIES.

The following are extracts from the Administration Reports of Industries and Excise Departments of Travancore State.

The Rubber Factory was opened on the 1st Chingom IIII by His Highness the Maharaja. Mr. John Helen, Rubber Expert was in charge of the Factory throughout the year. Although equipped with-up-to-date machinery for the manufacture of almost all kinds of rubber goods, there were few men to handle them. The first nine months were spent in training the workmen, and saleable articles began to be produced within a few months of starting work. The articles produced were cycle tyres, tubes, motor car tubes garry tyres, rubber hoses, surgical tubings, rubber sheetings laboratory tubings, developers, rubber caps, dipped goods and moulded goods. The value of the total manufacture during the year was Rs. 22,618-21-0 and the total sales amounted to Rs. 12,562-27-12. Messrs. The South India Corporation Ltd, Mattancherry, Cochin were appointed sole agents for South India for the sale of the goods manufactured in the Factory, on the 12th June 1936. The products have been well received by the public and they also compare favourably in quality and price, with the foreign imported articles.

Sardar Dogar Singh of the Benares Hindu University was appointed Ceramic Expert and he took charge on the 23rd May 1936 The necessary lands for the location of the factory were acquired at Kundara. Besides arranging for the purchase of machines, etc, the Ceramic Expert carried on the preliminary work of investigating the deposits of China clay.

Mining operations continued to make progress. Mica mining in the Achencoil Reserve Forest was revived during the year. The quantity of ilmenite sand exported was almost the same as in the previous year. During the geological traverses in the mountainous regions of the Tovala taluk an important occurence of monozite bearing rock associated with ilmenite and biotite was noticed by the Geological Assistant. In the same taluk, a lode containing pyrrotite and other minerals is being exposed with a view to determine its prospects. Investigations of the ilmenite deposits between Neendakara and Kayenkulam bars and of the possibilities for glass manufacture in Travancore are being continued. As per directions of the Director, Industrial Intelligence and Research Bureau, Simla, 15 samples of glass sands were collected and sent to the Government Test house, Alipore.

The experimental manufacture of salt in the 16 pans selected for work in the Thamaracolam Old Allom was continued by the Industrial Chemist. The improvements effected in the yield and quality as reported last year were maintained. 24 samples of salt from various alloms forwarded by the Excise Commissioner were analysed in the Laboratory. Detailed analyses of the market samples of 'Indian Brandy' and 'Holland Brandy' were also made at the instance of the Excise Commissioner. Samples of fire clay and ball clay were also analysed at the instance of the Standard Tile Works, Alwaye. The Water Analyst continued to work in the Research Laboratory and samples of water, lime and alum were analysed for the Water Works Department.

The Travancore State Aid to Industries Regulation was brought into force from the beginning fo December 1935. 26 applications for loans were registered during the year and 4 loans amounting to Rs. 6,750 were granted of which one was for power-loom weaving, two for oil and rice milling, and one for hand-loom weaving.

It is seen that arrears under industrial loans at the end of 1110 amounted to Rs. 26,615-16-9 and a sum of Rs. 21,579-20-8 fell due in 1111. Of this, only a sum of Rs. 13,932-11-6 including the amount of Rs. 1,579-14-14 paid in excess to meet future dues by some parties, was collected leaving a balance of Rs. 35,842-12-9 at the end of 1111 M.E. The amount pending collection is very heavy and the Director of Industries is requested to see that all the arrears outstanding are collected as early as possible.

Customs. The total receipts under customs,during the year was Rs. 40,88,739 against Rs. 39,28,811 in 1110, the increase being Rs. 1,59,928 A sum of Rs. 13,38,646 was received during the year under review under the Cochin Harbour Agreement, against Rs. 11,38,955 in the previous year. If this item is excluded, there was a decrease of Rs. 39,763 in the revenue under customs during 1111.

The receipts under imports rose from Rs. 6,99,077 in 1110, to Rs. 7,92,759 while the receipts under exports fell from Rs. 20,75,041 in 1110 to Rs. 19,44,306 during the year under review. Nearly 61 per cent of the import duty was contributed by snuff, English tobacco, cigars, cigarettes, *beedies*, tobacco used for the manufacture of *beedies*,gudak other kinds of manufactured Indian Tobacco, *induppu*, table salt and liquors manufactured in British India and

Indian States, which were mainly imported through the Land Customs Houses. The bulk of the export duty was, as usual, realised from the produce of the cocoanut tree, *viz*.: copra, cocoanuts, coir cables, coir fibre, cocoanut husk, cocoanut oil & *punnac*. These articles together yielded Rs. 7,25,885, or 37·33 per cent of the total revenue from exports, the corresponding duty and percentage in 1110 being Rs. 9,16,384 and 44·16, respectively. There has been an increase under cocoanuts, cables and coir fibre, while there was a fall under copra, coir, cocoanut husk, *punnac* and cocoanut oil. The increase observed under cocoanuts, cables and coir fibre was due mainly to greater demand from outside. The fall under copra, coir, cocoanut husk, cocoanut oil and *punnac* was due partly to poor output and partly to lesser demand from outside markets. The exports under hides, ginger dry, tamarind, cane sugar unrefined, tea and pepper showed fairly good increase on account of the larger production and greater demands from outside markets. The exports under arecanuts without husk, jaggery, laurel oil, fish prawns and fish-other sorts fell considerably during the year. The decrease under the first three was solely due to poor output

Trade. The volume of external trade fell from Bh. Rs. 16,29,17,762 in 1110 to Bh. Rs. 15,58,92,457 during the year. The value of exports was Bh. Rs. 8,15,83,006 or 52 per cent and of imports Bh. Rs. 7,43,09,251 or 48 per per cent of the total volume of trade, against 51 and 49 per cent, respectively in 1110. 26·08 per cent of the external trade was carried on by sea, 44·16 by backwater, 13.69 by land and 16 07by railway, against 26·28, 44 92, 15·32 and 13·48, respectively in 1110.

South Indian Railway Advisory Committee.

The 56th meeting of the South Indian Railway Advisory Committee was held at Madras Egmore on the 31st July 1937.

Mr. C. A. Muirhead, Agent, presided. The following is a summary of the proceedings sent to us for publication.

